தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**6.04.2013 A.M**

---

**வேளாண் துறையில் 1,655 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்: செ. தாமோதரன்**

வேளாண்மைத் துறையில் காலியாக உள்ள 1,655 காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று அத்துறையின் அமைச்சர் செ. தாமோதரன் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில் அவர் வெளியிட்ட அறிவிப்புகள்: வேளாண்மைத் துறையில் காலியாக உள்ள 241 வேளாண்மை அலுவலர்கள், 319 உதவி வேளாண்மை அலுவலர்கள், 239 கிடங்கு மேலாளர்கள், 856 கிடங்கு காவலர்கள் என மொத்தம் 1,655 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

மண் வரை படங்கள் தயாரிக்க ரூ. 6 கோடி: வேளாண் உற்பத்தியை அதிகரிக்க தமிழகம் முழுவதும் மண் பரிசோதனைகள் மேற்கொண்டு மண் வரைபடங்களை தயாரிக்க ரூ. 6 கோடி செலவிடப்படும்.

உடல் நலம் காக்கும் சிறு தானியப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்க விளை பொருள்களை சுத்திகரிப்பு செய்யும் இயந்திரங்கள் விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்படும். திருவண்ணாமலை மாவட்டம் அத்தியேந்தல் அரசு விதைப் பண்ணையில் ரூ. 1 கோடியில் சிறு தானிய மகத்துவ மையம் அமைக்கப்படும்.

நடவுக்கன்றுகள் விதைகள் உற்பத்தி செய்ய ரூ. 15 கோடி:தோட்டக்கலைப் பண்ணைகளில் சான்று பெற்ற தரமான தோட்டக்கலை நடவுக்கன்றுகள் மற்றும் விதைகள் ரூ. 15 கோடியில் செலவில் உற்பத்தி செய்யப்படும். ஸ்ரீரங்கம், பொள்ளாச்சியில் ரூ. 2.20 கோடியில் உணவுப் பதப்படுத்தும் தொழில் முனைப்பு மையங்கள் அமைக்கப்படும்.

வேளாண் அலுவலர்களுக்கு தொடுதிரை கம்ப்யூட்டர்கள்: வேளாண் விரிவாக்கப் பணியாளர்களுக்கு தொடு திரை வசதியுடன் கூடிய சிறிய கம்ப்யூட்டர் வழங்கப்படும். விவசாயிகளுக்கு நிலையான வருமானம் கிடைக்க ஒருங்கிணைந்த திட்டம் மாவட்டம் முழுவதும் விவசாயிகளின் பண்ணைகளில் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இது முன்னோடித் திட்டமாக விழுப்புரம் மாவட்டத்தில் ரூ. 15 கோடியில் செயல்படுத்தப்படும் என்றார் அமைச்சர் தாமோதரன்.

### "தமிழகத்தில் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது'

தமிழகத்தில் சாகுபடி பரப்பு குறைந்து வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

பேரவையில் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் இது குறித்து கூறப்பட்டிருப்பதாவது:-

இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் தமிழகம் 4 சதவீதத்தையும், 3 சதவீத நீர் ஆதாரங்களையும் கொண்டுள்ளது. 2001-02-ல் 62.26 லட்சம் ஹெக்டேராக இருந்த மொத்த சாகுபடி பரப்பு (தோட்டக்கலைப் பயிர்கள் உள்பட), 2011-12-ல் 57.53 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது.

இதில் 33.48 லட்சம் ஹெக்டேர் அதாவது 58 சதவீதம் பாசனப் பகுதியாகவும், 24.05 லட்சம் ஹெக்டேர் அதாவது 42 சதவீதம் மானாவாரிப் பகுதியாகவும் உள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

### நகரங்களில் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்க ரூ.5 கோடி

நகரங்களில் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்க ரூ. 5 கோடியில் நகர்ப்புற தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

பேரவையில் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட வேளாண்மைத் துறை கொள்கை விளக்கக் குறிப்பில் இது குறித்து கூறப்பட்டிருப்பதாவது:-

நகரங்களில் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்க ரூ. 5 கோடியில் நகர்ப்புற தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் 2013-14ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம் நடவுச் செடிகள், இயற்கை இடுபொருள்கள், பூந்தொட்டிகள், மண்ணில்லா கலவை, இயற்கை பூச்சிக் கொல்லிகள் மற்றும் தோட்ட உபகரணங்கள் முழு விலையில் தொழில்நுட்ப அறிவுரைகளுடன் வழங்கப்படும்.

சென்னை மாநகரில் அனைத்து மண்டலங்களிலும் 16 தோட்டக்கலை விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டு, அதன் மூலம் தோட்டம் அமைப்பது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### "மாட்டுச்சாண ஏற்றுமதியை தடுக்க நடவடிக்கை'

மாட்டுச் சாணம் ஏற்றுமதியைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று வேளாண்மைத் துறை அமைச்சர் செ. தாமோதரன் தெரிவித்தார்.

பேரவையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, மாட்டுச்சாணம் மிகச் சிறந்த இயற்கை உரமாகும். நம் நாட்டிலேயே அதன் தேவை அதிகமாக இருக்கிறது. எனவே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடுக்க வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தாமோதரன், மாட்டுச்சாணத்தை தூளாக்கி ஒரு நிறுவனம் மாலத்தீவுக்கு ஏற்றுமதி செய்வதாக தகவல் வந்துள்ளது. மத்திய அரசின் கவனத்துக்கு எடுத்துச் சென்று மாட்டுச் சாண ஏற்றுமதியைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார்.

**விவசாயிகளைச் சந்தித்து ஆதரவு திரட்டும்அத்திக்கடவு-அவிநாசி திட்ட போராட்டக் குழு**

அத்திக்கடவு-அவிநாசி நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்ட போராட்டக் குழு, விவசாயிகளைச் சந்தித்து ஆதரவு திரட்டி வருகிறது.

பில்லூர் அணைப் பகுதியில் வெள்ளப் பெருக்கின்போது ஏற்படும் 2.5 டி.எம்.சி. தண்ணீரை கோவை, திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 8 தாலுகாக்களுக்கு கொண்டு சென்று நிலத்தடி நீரை உயர்த்துவதே இத் திட்டத்தின் நோக்கம். 1954-இல் ஆய்வு நடத்தப்பட்டு 1967-இல் இத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத் திட்டத்தின்கீழ் பில்லூர் பகுதியில் கிடைக்கும் உபரி நீர் அங்கிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ள அன்னூர் வரை கால்வாய் மூலமாக கொண்டு வரப்பட உள்ளது. அங்கிருந்து, அச்சம்பாளையம் வரை வேறு கால்வாய் செல்ல உள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.1,850 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் தலைமையில் கொங்குநாடு முன்னேற்றக் கழகம், தமிழக விவசாயிகள் சங்கம், கொங்கு இளைஞர் பேரவை உள்ளிட்ட இயக்கங்கள் ஒன்று சேர்ந்துள்ளன. 6 மாதத்துக்குள் இத் திட்டத்தைத் துவக்காவிட்டால் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொங்குநாடு முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் ஜி.கே. நாகராஜ், கொங்கு இளைஞர் பேரவைத் தலைவர் குமார. ரவிக்குமார் ஆகியோரை உள்ளடக்கிய போராட்டக் குழுவினர், இத் திட்டத்தால் பயனடையும் பகுதிகளில் விவசாயிகளைச் சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

**காங்கயம் காளைகளை பாதுகாக்க விவசாயிகள் கூட்டமைப்பு வலியுறுத்தல்**

காங்கயம் காளைகளை பாதுகாக்க அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் நல்லசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை: காங்கயம் காளைகள் அழகு, கம்பீரம், தோற்றப் பொலிவு, உழைப்பிற்கும் பெயர் பெற்றவை.

கடந்த 1969-ம் ஆண்டு வரை இந்த இனக் கால்நடைகள்தான் இப்பகுதி மக்களுடைய தனிப்பெரும் செல்வமாகக் கருதப்பட்டது. நிலத்தை உழுவதற்கும், பொருள்களை கொண்டு செல்வதற்கும் இந்தக் காளைகள்தான் பயன்பட்டு வந்தன.

விளைநிலத்தை உழுவதற்கு டிராக்டர்கள், நீரிறைப்பதற்கு ஆயில் என்ஜீன், மின் மோட்டார்கள் பயன்பாடு என பல்வேறு காரணங்களால் இக் கால்நடைகளின் முக்கியத்துவம் மறையத் தொடங்கியது.

தற்போது காங்கயம் காளைகள் அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டுள்ளன. கொங்கு நாட்டின் கொடிய கோடைகால வெம்மையையும், வறட்சியையும் தாங்கக் கூடிய சக்தி இந்தக் காங்கயம் காளை இனத்துக்கு உண்டு. இதற்கான பராமரிப்புச் செலவு குறைவுதான். இது மண்ணின் தட்பவெப்ப நிலையை தாங்கி வளரும் தனிச் சிறப்பு கொண்ட இனம். காங்கயம் கால்நடைகளை பாதுகாப்பது அவசியம்.

இதுதொடர்பாக அரசு தனிக்கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காலிங்கராயன் அணைக்கட்டில் கழிவுநீர்:நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை**

காலிங்கராயன் அணைக்கட்டில் தேங்கிக் கிடக்கும் கழிவுநீரை அகற்றவும், கழிவுநீர் கலக்காமல் இருக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பவானி ஆற்றில், பவானி அருகே காலிங்கராயன்பாளையம் தடுப்பணையில் இருந்து துவங்கும் காலிங்கராயன் வாய்க்கால், கரூர் மாவட்டம், நொய்யல் ஆற்றில் இணைந்து காவிரியில் கலக்கிறது. 56 மைல் நீளமுள்ள இந்த வாய்க்கால் மூலமாக 15,743 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் பொதுப்பணித் துறை மூலம் காலிங்கராயன் வாய்க்காலில், ஜூலை 16 முதல் 320 நாள் வரை பாசனத்துக்கு நீர் திறந்துவிடப்படுகிறது. நடப்பாண்டில் பருவமழை பொய்த்துவிட்டதால், பவானிசாகர் அணையில் நீர்மட்டம் குறைந்து விட்டது. இதனால், இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவே தண்ணீர் நிறுத்தப்பட்டது.

தற்போது, காலிங்கராயன் வாய்க்காலில், சிமென்ட் கரை அமைத்தல் மற்றும் மராமரத்துப் பணிகளை பொதுப்பணித் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், பவானி ஆறு

வழியாக வரும் சாயக்கழிவு நீர், காலிங்கராயன் வாய்க்கால் அணைக்கட்டில் தேக்கம் அடைந்துள்ளது.

இதனால், அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதுடன், நிலத்தடி நீர் பாதிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. எனவே, அதிகாரிகள் தலையிட்டு சாயக்கழிவு நீரைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, காலிங்கராயன் வாய்க்கால் பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### வேளாண் பொருள்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்க புதிய திட்டம்

பொதுமக்கள் வேளாண் பொருள்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், அதன்மூலம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் புதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உலகமயமாக்கலால் பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் குளிர்பானங்கள், சாம்பு, செயற்கை நூலிழை ஆடைகள் என அனைத்து வகை ரசாயனப் பொருள்களும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் சாதாரண மக்களிடையே திணிக்கப்பட்டு வருகிறது. இதனால், உள்ளூர் விவசாய பொருள்களுக்கு சந்தை வாய்ப்புகள் குறைந்து கிராம பொருளாதாரம் பாதிக்கப்படுவதுடன், அயல்நாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் பொருள்களை பயன்படுத்தும் மக்களுக்கு உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இழப்பு ஏற்பட்டுக் கொண்டுள்ளது.

இந்த இரு பாதிப்புகளை தவிர்த்து கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், பொதுமக்கள் ஆரோக்கியமான வேளாண் உற்பத்தி பொருள்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், தமிழக அரசு சிறப்புத் திட்டம் என்ற பெயரில் புதிய திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. தமிழகத்தின் பாரம்பரிய இளநீர், சீகக்காய், பருத்தி உள்ளிட்ட வேளாண் உற்பத்திப் பொருள்களின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி அவற்றை மீண்டும் வழக்கத்துக்கு கொண்டு வருவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காக மாவட்டம் தோறும் வேளாண்மை, தோட்டக்கலைத் துறை, வனத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், கோ-ஆப்டெக்ஸ், கதர் மற்றும் கைத்தறித் துறை, வேளாண் அறிவியல் நிலையம் ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து மாவட்டம் மற்றும் வட்டார அளவில் விழிப்புணர்வு முகாம்கள், பேரணிகள் நடத்திடவும், சுவர் விளம்பரங்கள் மூலமாகவும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, மாவட்ட மக்களிடையே இளநீர், சீகக்காய், பருத்தி உள்ளிட்ட வேளாண் உற்பத்தி பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்து ஆட்சியர் டி.ஜகந்நாதன் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது. இதில், மாவட்டம் மற்றும் வட்டார அளவில் நடத்த வேண்டிய விழிப்புணர்வு முகாம்கள், பேரணிகள் ஆகியவற்றை ஏப்ரல் மாத இறுதிக்குள் நடத்தி முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

இதுகுறித்து, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் பிரபாகரன் கூறியது:

இந்தத் திட்டத்தின்படி, வட்டார அளவில் 2 பேரணிகள் நடத்தப்படுவதுடன், நுகர்வோர், வேளாண் பொருள்கள் உற்பத்தியாளர்கள், ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு வட்டார அளவில், மாவட்ட அளவில் கருத்தரங்கம் நடத்தப்படும். கருத்தரங்கங்கள் மூலம் இளநீர், சிகக்காய், பருத்தி ஆடைகளை பயன்படுத்துவதால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து மக்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட உள்ளது என்றார் அவர்.

தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கதிரவன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### சிறுநீரக நோய் பாதித்த விவசாயிகளுக்கு ஓய்வூதியம்'

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 2011-ஆம் ஆண்டின் கீழ், சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வரும், தாற்காலிகமாக வருவாய் ஈட்ட இயலாத நிலையில் உள்ள விவசாய உறுப்பினர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வரும் ஏழை, எளிய விவசாயிகள் அனைவரும் இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

டயாலிசிஸ் சிகிச்சை செய்து கொண்டு வரும் விவசாய உறுப்பினர்கள் குடும்ப அட்டை, உழவர் பாதுகாப்பு அட்டை, டயாலிஸ் சிகிச்சை செய்து கொண்டதற்கான நோய் குறிப்பு சீட்டு, மருத்துவமனையின் மருத்துவக் குறிப்பு, வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகத்தின் நகல் ஆகியவற்றுடன் கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள நலப் பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

### கரூரில் வேளாண் உற்பத்தியாளர் நிறுவனம் தொடக்கம்

மாநிலத்திலேயே முதல் முறையாக கரூர் மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியாளர்கள் நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நச்சலூர் ஊராட்சியில் நபார்டு வங்கி சார்பில் வியாழக்கிழமை வேளாண் உற்பத்தியாளர் நிறுவனத்தை தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

விவசாயிகளே, விவசாயிகளுக்காக ஒன்று சேர்ந்து இந்திய கம்பெனி சட்டத்தின் கீழ், நச்சலூர் விவசாய உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்கியுள்ளனர். விவசாயிகளுக்கு இத்தகைய நிறுவனங்கள் வரும் காலக்கட்டங்களில் பெரிதும் உதவும். இத்தகைய உற்பத்தியாளர் நிறுவனங்கள் கரூர் மாவட்ட வாழை மற்றும் முருங்கை விவசாயிகளுக்காகவும் தொடங்கினால் ஏனைய விவசாயிகளும் பயனடைவர்.

இத்தகைய விவசாய உற்பத்தியாளர்களின் புதிய அமைப்புகள் விவசாயிகளுக்கு வேண்டிய இடுபொருட்கள், விவசாய கருவிகள், புதிய விவசாய தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு அளித்து முக்கிய பணியாற்ற முடியும். இந்த உற்பத்தியாளர் நிறுவனம் நச்சலூர் மற்றும் நெய்தலூர் பகுதியில் இருக்கும் சுமார் 100 கிராமங்களை சார்ந்த விவசாயிகளுக்கு தரமான நெல் விதை மற்றும் உரம் போன்றவைகளைக் குறைந்த விலைக்கு கிடைக்கச் செய்யும் வகையில் செயல்படும் என்றார் அவர். நபார்டு வங்கி சார்பில், இந்த நிறுவனத்துக்கு ரூ. 23 லட்சத்திற்கான கடன் ஆவணத்தை அதன் தலைவர் ஜி. கரிகாலனிடம் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் நபார்டு வங்கி துணைப் பொது மேலாளர் ஏ. பார்த்திபன், முன்னோடி வங்கி மேலாளர் எம். முருகேசன், இணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ரவி, வேளாண்மை துணை இயக்குநர் (விதை உற்பத்தி) சேகர், சரஸ்வதி வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரவியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புதிய கால்நடை மருந்தகங்கள் திறக்க வலியுறுத்தல்

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேவைப்படும் இடங்களில் புதிய கால்நடை கிளை நிலையங்களை திறக்க வேண்டுமென தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

புதுக்கோட்டையில் அச்சங்கத்தின் மாவட்டச் செயலர் கே. குமரேசன் தலைமையில் அண்மையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தரம் உயர்த்தப்பட்ட ஊரக கால்நடை மருந்தகங்களில் உள்ள கால்நடை ஆய்வாளர் பணியிடத்தை நிரப்ப வேண்டும். பொன்னமராவதி, கந்தர்வகோட்டை கால்நடை

மருத்துவமனைகளில் விடுபட்ட கால்நடை மருத்துவ மேற்பார்வையாளர் பதவியை உருவாக்க வேண்டும். கால்நடை ஆய்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய விகித குறைபாடுகளைப் போக்க வேண்டும். வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் கால்நடை கிளை நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் அமைக்க அரசு நிதி ஒதுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில், மாவட்ட துணைச் செயலர் எஸ். செந்தில்நாதன், கோட்டச் செயலர் கே. குணசேகரன், ஓய்வு பெற்ற கால்நடை ஆய்வாளர் சங்க மாவட்டச் செயலர் என். பரசுராமன், முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் பி. ஜானகிராமன், அறந்தாங்கி கோட்டச் செயலர் எஸ். தென்னரசு ஆகியோர் பேசினர்.

### மாம்பிஞ்சு உதிர்வைத் தடுக்க வம்பனில் ஏப்.9-ல் பயிற்சி

மாமரங்களில் பிஞ்சு உதிர்வைத் தடுப்பது தொடர்பான இலவச பயிற்சி வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (ஏப்.9) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட தகவல்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம், கந்தர்வக்கோட்டை, திருவரங்குளம், புதுக்கோட்டை, இலுப்பூர், குளத்தூர் ஆகிய வட்டங்களில் 2,252 எக்டேரில் மா பயிரிடப்படுகிறது. இதுதவிர வீடுகளிலும் மா மரம் வளர்க்கப்பட்டு வருகிறது. மாம்பழத்தில் வைட்டமின் ஏ சத்து மற்றும் தாது உப்புக்கள் அதிகம் உள்ளன. காய்கள் சமையலில் பயன்படுகிறது.

தற்பேது மா மரங்கள் பூத்து பிஞ்சு பிடிக்கும் தருவாயில் உள்ளன.

மாவில் பிஞ்சு பிடிக்கக்கூடிய இருபால் பூக்கள் ஒரு சதம் மட்டுமே இருக்கும். இதிலிருந்து பிஞ்சுகள் 2 முதல் 10 வரை உருவாகும்.

இந்த பிஞ்சுகள் அனைத்தும் மரத்தில் நிலைத்து நின்றால் மட்டுமே அதிக மகசூல் பெற இயலும்.

ஆனால் பொரும்பாலான மரங்களில் இந்த பிஞ்சுகள் ஆரம்ப நிலையிலிருந்தே உதிர்ந்து கொண்டே இருக்கும்.

எனவே இதனை தடுத்து நிறுத்தி அதிக காய்களை மரத்திலிருந்து பெறுவதற்கான தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் புதுக்கோட்டை அருகிலுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 9-ம் தேதி நடைபெற உள்ளது. ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளலாம்.

### வம்பனில் காய்கறி சாகுபடி பயிற்சி

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் காய்கறி சாகுபடி பயிற்சி இரண்டு நாள் நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறை சார்பில் அண்மையில் நடைபெற்ற பயிற்சிக்கு அத்துறையின் உதவி இயக்குநர் பி.பி. சம்பத்குமார் தலைமை வகித்தார். மாவட்ட துணை இயக்குநர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். பேராசிரியர்கள் கிருஷ்ணமூர்த்தி, சாமிநாதன் ஆகியோர் பருவத்துக்கேற்ற காய்கறி பயிர்களும், அதை சாகுபடி மேற்கொள்வது குறித்தும் பயிற்சி அளித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை ஆலங்குடி தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் செய்திருந்தனர்.

**கரும்புக்கான நிலுவைத் தொகையை வழங்க முதல்வர் உத்தரவிட வேண்டும்'**

கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வட்டியுடன் வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு தமிழக முதல்வர் உத்தரவிட வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு, கட்சியின் மாவட்டச் செயலர் ம.க. ஸ்டாலின் அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பது:

தஞ்சை மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள திருமண்டங்குடி மற்றும் கோட்டூர் அம்பிகா சர்க்கரை ஆலைப் பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் பயிரிட்ட கரும்பு வெட்டப்பட்டு இந்த ஆலைகளுக்கு அனுப்படுகிறது.

கரும்பு வெட்டி ஆலைக்கு அனுப்பிய 15 நாட்களில் விவசாயிகளுக்கு பணம் தரப்படும் என ஆலை நிர்வாகம் ஒப்பந்தம் செய்துள்ளது. ஆனால், 3 மாதங்களாகியும் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை.

இதனால் கடனை அடைக்க முடியாமலும், குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாமலும், அடுத்ததாக கரும்பு விவசாயத்தை மேற்கொள்ள பணம் இல்லாமலும் விவசாயிகள் தத்தளித்து வருகின்றனர்.

எனவே, விவசாயிகளுக்கு உடனே நிலுவைத் தொகையை வட்டியுடன் வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு முதல்வர் உத்தரவிட வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

6.04.2013 A.M

## சர்க்கரை விலை குறைவு வரும் நாட்களிலும் நீடிக்குமா?

சர்க்கரை விலை மீதான கட்டுப்பாட்டை, மத்திய அரசு விலக்கிக் கொண்டதால், விலை கணிசமாக குறைந்துள்ளது. ஆனாலும், வரும் நாட்களில், சர்க்கரை விலை ஏறுமா அல்லது இறங்குமா என்பது கேள்வி குறியாகவுள்ளது.

**கோரிக்கை:** சர்க்கரை விலை மீதான கட்டுப்பாடு, மத்திய அரசு வசம் இருந்தது. இந்த விலை கட்டுப்பாட்டை விலக்கிக் கொள்ள வேண்டும் என, சர்க்கரை ஆலைகள் கோரி வந்தன. பல ஆண்டுகளாக விடுக்கப்பட்ட, இந்த கோரிக்கை குறித்து ஆராய, பிரதமரின் பொருளாதார ஆலோசகர், ரங்கராஜன் தலைமையில், குழு ஒன்றை மத்திய அரசு அமைத்தது.இந்தக் குழு, சில மாதங்களுக்கு முன் அளித்த அறிக்கை மீது, நேற்று முன் தினம், மத்திய அமைச்சரவை முடிவெடுத்தது. இதன்படி, சர்க்கரை விலை மீதான கட்டுப்பாட்டை, மத்திய அரசு விலக்கிக் கொள்வது என்றும், இனி, சர்க்கரை விலையை, சர்க்கரை ஆலைகளே தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**மாற்றங்கள்:** சர்க்கரை விலை மீதான கட்டுப்பாட்டை, மத்திய அரசு விலக்கிக் கொண்டதால், சர்க்கரை உற்பத்தி தொழில் துறையில், புதிய மாற்றங்கள் நிகழலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக, டில்லியில் நேற்று, சர்க்கரை ஆலைகளின் உயர் அதிகாரிகள் கூறியதாவது: சர்க்கரை விலை மீதான கட்டுப்பாட்டை, மத்திய அரசு விலக்கிக் கொண்டதால், இதுவரை மத்திய அரசு வசமிருந்த அதிகாரம், தற்போது, ஆலைகளின் கைகளுக்கு மாறியுள்ளது. மத்திய அரசின் இந்த முடிவு, சர்க்கரை ஆலைகள் துறையில், இதுவரை நிலவி வந்த சுணக்கத்தை போக்கும்.மத்திய அமைச்சரவையின் முடிவு அறிவிக்கப்பட்ட உடனேயே, எண்ணற்ற சர்க்கரை ஆலைகள், விரைந்து செயல்படத் துவங்கியுள்ளன. இதுவரை, தங்கள் கைவசம் இருந்த சர்க்கரையை, துரிதமாக வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இருப்பு சர்க்கரை அனைத்தும், வெளியே வந்துள்ளதால், சந்தையில் சர்க்கரையின் விலை, கணிசமாக குறைந்துள்ளது.

**வளர்ச்சி:** இதுவரை, கிலோ, 30 முதல், 31 ரூபாய் வரை விற்கப்பட்ட, 1 கிலோ சர்க்கரை, நேற்று, வட மாநிலங்களில், கிலோ, 29.40 ரூபாய்க்கும், சென்னை உட்பட, தென்மாநில நகரங்களில், 28.75 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.இனி, சர்க்கரை விலை, அதிக அளவு ஏற வாய்ப்பு இல்லை. வரும், சில மாதங்களில், சிறிதளவு ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும், ஒரு கட்டத்திலிருந்து குறிப்பிட்ட விலையே நீடிக்கும்.சர்க்கரை விலை மீதான கட்டுப்பாடு, மத்திய அரசு வசமிருந்தபோது, சர்க்கரை ஆலைகள், தங்கள் உற்பத்தியில், 10 சதவீதத்தை, அரசுக்கு மானிய விலையில் அளித்து வந்தன. அதாவது, கிலோ, 13.50க்கு, அரசுக்கு தந்தன. இனி, கிலோவுக்கு, 32 ரூபாய் கொடுத்தே, சர்க்கரை ஆலைகளிடம் இருந்து, அரசு சர்க்கரை வாங்க வேண்டும். இதனால், சர்க்கரை ஆலைகள் வளர்ச்சி அடையும்.கடந்த பயிர் ஆண்டில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.50 கோடி டன்னாக இருந்தது. இந்த ஆண்டு, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் நிலவும், வறட்சி காரணமாக, விளைச்சல் குறைந்துள்ளதால், உற்பத்தி, 10 லட்சம் டன் வரை குறைய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு சர்க்கரை ஆலைகளின் உயர் அதிகாரிகளின் கூறினர்.

**கட்டுப்பாடுகள் மேலும் தளருமா?** கரும்பு உற்பத்தியில், உத்தர பிரதேச மாநிலம் முதலிடம் வகிக்கிறது. அதற்கு அடுத்ததாக, மகாராஷ்டிரா, தமிழகம் மற்றும் கர்நாடகா மாநிலங்கள் உள்ளன. சர்க்கரை ஆலைகள் தரப்பில், எண்ணற்ற கோரிக்கைகள், அரசுக்கு விடுக்கப்பட்டிருந்தன.அவற்றில், விலை கட்டுப்பாடு மட்டுமே விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகள், குறிப்பிட்ட தூர இடைவெளியில் இயங்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு பகுதியில் உற்பத்தியாகும் கரும்புகள் எல்லாம், அந்தப் பகுதி ஆலைகளுக்கே வழங்கப்பட வேண்டும் என, மத்திய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் எல்லாம், இன்னும் தொடர்கின்றன. இந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டால், சர்க்கரை ஆலைகள் மேலும் வளர்ச்சி அடையும் என்பது, ஆலை நிர்வாகங்களின் கருத்து.

### *சணலுக்கான ஆதரவு விலையை மத்திய அரசு உயர்த்தியது*

புதுடில்லி:மத்திய அரசு, சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை, குவிண்டாலுக்கு, 100 ரூபாய் உயர்த்தி உள்ளது.இதன்படி, நடப்பு 2013-14ம் நிதியாண்டில், ஒரு குவிண்டால், "டி.டீ-5' அல்லது முக்கிய ரக சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, 2,300 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது, சென்ற நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்டதை விட, 100 ரூபாய் அதிகமாகும். சணல் கொள்முதல் விலை உயர்வு, விவசாயிகளுக்கு ஊக்கமளித்து, சணல் உற்பத்தியை அதிகரிக்க உதவும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய வேளாண் செய்திகள்

6.04.2013 A.M

## செஞ்சி பகுதியில் இருந்து பிற மாவட்டங்களுக்கு வைக்கோல் விற்பனை

செஞ்சி, : செஞ்சி பகுதியில் அறுவடையான வைக்கோல் தருமபுரி உள்ளிட்ட மாவட்டத்திற்கு லாரிகளில் கொண்டு சென்று விற்பனை நடைபெற்று வருகிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவி வருகிறது. இதனால் நெல் பயிர் செய்ய முடியாத விவசாயிகள் தங்களது நிலத்தில் மாணா வாரி பயிர் செய்து வருகின் றனர். இதனால் கால்நடை களுக்கு போதிய வைக் கோல் கிடைக்காமல் போனது. இதனால் தங்களது கால்நடைகளை காப்பாற்ற விவசாயிகள் வைக்கோலை தேடி வேன் களில் சுற்றி வருகின்றனர். இந்நிலையில் செஞ்சி பகுதியில் கால்நடைகள் குறைவாக உள்ளதாலும், பயிர் செய்து கடனை அடைப்பதற்காக வும் இப்பகுதி விவசாயிகள் தங்களது வைக்கோலை விற்பனை செய்து வருகின்ற னர். தருமபுரி, கிருஷ்ணகிரி விவசாயிகள் வைக்கோலை ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை விலை கொடுத்து வைக் கோலை வாங்கி வேன்களில் ஏற்றி செல்கின்றனர்.

தினமும் 100க்கும் மேற்பட்ட வேன் மற்றும் லாரிகளில் ஏற்றி செல்கின்றனர். தற்போது செஞ்சி பகுதியில் உள்ள வைக்கோல் விற்பனை செய்யப்படுவதால் வரும் கோடை மாதத்தில் ஏற்படும் வறட்சியால் செஞ்சி பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு போதிய அளவு வைக்கோல் கிடைக்காமல் போகும் நிலை உள்ளது.

## சாலையில் தானியங்களை உலர வைப்பதால் விபத்து அபாயம்

திருக்கோவிலூர், : திருக்கோவிலூர் பகுதியில் உள்ள கிராம சாலைகள் மற்றும் திருவண்ணாமலை, விழுப்புரம், பண்ருட்டி, கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, மணலூர்பேட்டை, வேட்டவலம், சங்கராபுரம் ஆகிய நெடுஞ்சாலைகளை விவசாயிகள் முழுமையாக ஆக்கிரமித்து உலர்களமாக பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இப்பகுதியில் தினசரி 10க்கும் மேற்பட்ட வாகன விபத்துக்கள் ஏற்பட்டு அதன்மூலம் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது. இதுபோன்று விபத்துக்களுக்கு காரணம் சாலையில் உலர வைக்கும் கேழ்வரகு, கம்பு, உளுந்து ஆகிய தானியங்கள் சாலையில் இருக்கும் போது அதன்

வழுக்கும் தன்மையால் வாகன விபத்துக்கள் ஏற்படுகிறது. மேலும் தானியத்தை உலர்த்தும் போது காற்றில் தானியத்தில் இருந்து வெளியாகும் கழிவுகள் வாகன ஓட்டிகள் கண்ணில் பட்டு விபத்துக்களை ஏற்படுத்துகிறது.

எனவே மாவட்ட நிர்வாகம் உடனடியாக சாலையில் தானியம் உலர்த்துவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**கடும் வெயிலுக்கு கருகும் பயிர்கள் கண்ணீர் வடிக்கும் விவசாயிகள்**

காரைக்குடி, : கோடை வெயில் கொளுத்துவதால் தோட்டப்பயிர்களுக்கு நீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர்கள் கருகுவதால் விவசாயிகள் கடும் வேதனையடைந்துள்ளனர்.

காரைக்குடி அருகே சாக்கோட்டை ஒன்றியத்துக்கு உட்பட்டு பெரியகோட்டை, பெத்தாச்சி குடியிருப்பு, சிறுகப்பட்டி, மித்ராவயல், புளியங்குடியிருப்பு, முள்ளங்காடு உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இங்கு பல ஆண்டுகளாக வாழை, கத்திரி, மிளகாய், பாகற்காய், பூசணி, வெண்டைக்காய், முள்ளங்கி உள்பட பல்வேறு தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன.

பயிர்கள் விளைந்ததும் பறிக்கப்படும் காய்கள் மதுரை, காரைக்குடி, அறந்தாங்கி, கொத்தமங்கலம், தேவகோட்டை, பள்ளத்தூர் உட்பட பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. இப் பகுதியில் கண்மாய், கிணறு மற்றும் போர் பாசனத்தை நம்பியே விவசாயம் செய்யப்படுகிறது. கடந்த செப்டம்பரில் பெய்ய வேண்டிய பருவ மழை பொய்த்து விட்டதால், சாக்கோட்டை பகுதிகளில் உள்ள அனைத்து கண்மாய்களும் வறண்டு காணப்படுகின்றன. மழை இல்லாததாலும், தற்பொழுது நிலவி வரும் கடும் கோடை வெயிலாலும், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கிணறு மற்றும் போர்களில் தண்ணீர் இல்லை. இதனால் செடிகளுக்கு தினமும் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் 5 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. போதிய தண்ணீர் இல்லாததால் செடிகள் அனைத்தும் காய்ந்து கருகி வருகின்றன.

இது குறித்து விவசாயி கருப்பையா கூறுகையில், 'தோட்டப்பயிர் விவசாயத்திற்காக உரம், பூச்சி மருந்து, விதை, உழவுக்கூலி என ஏராளமாக செலவு செய்துள்ளோம். தண்ணீர் இல்லாததால் செடிகளை பூச்சிகள் அதிக அளவில் தாக்கி வருகிறது. இதனால் ஒவ்வொரு மாதமும் பூச்சி மருந்து மற்றும் உரம் இட வேண்டி உள்ளது.

தண்ணீர் இல்லாததால் செடிகள் மற்றும் காய்கள் முற்றிலும் கருகி வருகின்றன. இதனால்

ஏக்கருக்கு ரூ 20 ஆயிரம் வரை இழப்பு ஏற்படும். தொடர்ந்து இதே நிலை நீடித்தால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்படும்' என்றார்.

**காய்கறி சாகுபடி பயிற்சி**

ஆலங்குடி,: ஆலங்குடி அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி நடைபெற்றது. தோட்டக்கலைத் துறை சார்பில் நடைபெற்ற இப்பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குனர் சம்பத்குமார் தலைமை வகித்தார். மாவட்ட துணை இயக்குனர் விஜயகுமார் முன்னிலை வகித்தார். பேராசிரியர்கள் கிருஷ்ணமூர்த்தி, சாமிநாதன் ஆகியோர் பருவத்துக்கேற்ற காய்கறிப் பயிர்களும் அதை சாகுபடி செய்யும் விதம் குறித்தும் விளைந்த பின் சந்தைப்படுத்துவது குறித்தும் பயிற்சியளித்தனர். ஏற்பாடுகளை ஆலங்குடி தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் செய்திருந்தனர். திருவரங்குளம், ஆலங்குடி மற்றும் சுற்று வட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**505 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா ஏப்.14 முதல் மே 20 வரை நடக்கிறது**

விருதுநகர், : விருதுநகர் மாவட்டத்தில் 505 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா வருகிற 14ம் தேதி முதல் மே 20ம் தேதி வரை நடைபெற உள்ளது என கலெக்டர் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், உழவர் பெருவிழா முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு தலைமை வகித்து கலெக்டர் ஹரிஹரன் பேசியதாவது:

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ஏப்ரல் 14ம் தேதி முதல் மே 20ம் தேதி வரை உழவர் பெருவிழா நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் 505 வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடத்தப்பட உள்ளது. இந்த விழா காலை 8 மணி முதல் பிற்பகல் வரை நடைபெறும்.

இதில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, விதை சான்றுத்துறை, வேளாண் விற்பனைத்துறை, வேளாண் பொறியியல்துறை, கால்நடைத்துறை, தமிழ்நாடு

கால்நடை கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம், வேளாண் அறிவியல் மையங்கள், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை, பட்டு வளர்ச்சித்துறை, மீன் வளர்ச்சித்துறை, முன்னோடி வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள், தனியார் மற்றும் கூட்டுறவு சர்க்கரை தொழிற்சாலைகள், தனியார், கூட்டுறவு மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனங்கள் இணைந்து, உழவர் பெருவிழா நடைபெறும் கிராமங்களில் கண்காட்சிகள் அமைக்க வேண்டும்.

விவசாயிகளின் தொழில்நுட்பம் சார்ந்த கருத்துக்கள், முன்னோடி விவசாயிகளின் அனுபவங்கள், பயிர் மகசூல் போட்டியில் வெற்றி பெற்ற விவசாயிகளின் அனுபவங்கள், விதைப்பண்ணை விவசாயிகளின் அனுபவங்களை பிற விவசாயிகளுக்கு விளக்க வேண்டும். விழாவில் விவசாயிகளுக்கு விதை நேர்த்தி, எலிஒழிப்பு, திருந்திய நெல் சாகுபடி, துவரை நடவு மற்றும் செயற்கை முறை கருவூட்டல், தடுப்பூசி போடுதல், நுண்ணுயிர் பாசனம், ஒருங்கிணைந்த பண்ணை அமைத்தல் உள்ளிட்ட செயல் விளக்கங்கள் செய்திட வேண்

டும்.

இவ்வாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா, கூட்டுறவு மண்டல இணைப் பதிவாளர் குருமூர்த்தி மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### குமரியில் மாம்பழ சீசன் தொடக்கம்

நாகர்கோவில், : குமரியில் மாம்பழ சீசன் தொடங்கியுள்ளது. ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களில் அனைத்து பகுதிகளிலுமே மாம்பழ சீசன் களை கட்டும். தற்போது குமரியில் மாம்பழ சீசனுக்கான அறிகுறிகள் தொடங்கியுள்ளது.
ஊறுகாய் போட பயன்படும் பச்சை மாங்காய் கிலோ ரூ.20க்கும், இமாம்சந்த் ரூ.50 -ரூ.60க்கும்,

பங்கனபள்ளி ரூ.45க்கும், செந்துரான் ரூ.30 - ரூ.35க்கும் பெங்களூரா ரூ.25க்கும், இதர வகைள் ரூ.20 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுபற்றி காய்கனி ஏற்றுமதி விற்பனை செய்து வரும் பிள்ளையார்புரத்தை சேர்ந்த தனபால் கூறியதாவது, தற்போது மாம்பழ சீசன் தொடங்கினாலும் முழுமையான சீசன் வர இன்னும் 15 நாட்கள் ஆகும். பருவமழை பொய்த்துள்ளதால் உள்ளூரில் மாங்காய் உற்பத்தி குறைவாக உள்ளது. அதே நேரத்தில் தேனி, கம்பம், மதுரை உள்பட வெளிமாவட்டங்களில் அதிகமான விளைச்சல் உள்ளது. இதனால் மாம்பழ விலை மிகவும் குறையாமலும், அதிகரிக்காமலும் மிதமான விலையில் இருக்கும் என்றார்.